www.tamilarangam.net

"பொதுமை" 1-1-82

# நமது பார்வை

## ஈழ விடுதலை நாள்?

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம் யாம் என்னும் செருக்கு —குறள்

உழைக்காதவனுக்கு உண்ண உரிமை இல்லாததுபோல ஒரு நாட்டின் விடுதலைக்கு பாடுபடாதவர்க்கு பாடுபட்டு. உடல் பொருள், ஆவியைத் துறப்பவரோடு துணையற்றவர்க்கு ஒரு நாட்டின் விடுதலை நாளை அறிவித்துக்கொண்டாடுவது என்பது நகைப்புக்கிடம்மட்டுமன்று, நாட்டு விடுதலைக்குத் தங்களையே களப்பலியாகத் தரும் வீர மறவர்களுக்கு இழிவைத் தேடித் தருவதாகும். ஈகத்தை (தியாகம்)க் கொச்சைப்படுத்துவதாகும்.

அரிமாக்களோடு இணைந்து போராட வலுவற்ற (தங்களைப் படித்த மேல்தட்டு நிலையினர் என்று எண்ணுகிற) நரிமாக்கள் அரிமாக்களின் பின்வரும் வெற்றியை முன்னரே கொண்டாடப் போகிறார்களாம்.

சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் சென்று விடுவதாலேயே தங்கட்கு எல்லாம் தெரியும் என்று சிலர் எண்ணுவதுபோல உலக ஒன்றிய மன்றிலே புறக்கடையில் நுழைந்து கூச்சலிட்டதாலேயே ஒருவர் உலகத்தின் விழிகளையும் செவிகளையும் திருப்பி விட்டதாக நினைப்பது, நீலக் கண்ணாடி போட்டதும் காண்பன அனைத்தும் நீலமே என்று நினைப்பதற்கு ஒப்பாகும்.

இந் நாட்டிலே ஆளும் கட்சியிலே சிலரும், கோயிலுண்டியை விழுங்கிவரும் சில கோயிற்பூனைகளும் (அறங்காவலர்கள்) லைப்பாட்டியின் அண்ணன், தம்பி, மக்கள் பேரிலே கொள்ளையடிப்பதற்காக பல நிறுவனங்களின் பெயரை எழுத்தட்டை (Letter Pad)களில் வைத்துக் கொண்டிருப்பதுபோல இல்லாத விடுதலை இயக்கங்களின் இணைப்பின் தலைவர் என்று அமெரிக்காவின் நியூயார்க், போஸ்டன் ஆகிய இடங்களிலிருந்து இந்தியா வருவதும் வேறு சில நாடுகட்குச் செல்வதும் தாம்தான் ஈழ விடுதலை மக்களின் தலைவர் என்றுக் கூறிக் கொள்ளும் ஒருவர் தைப் பொங்கல் அன்று தமிழர் விடுதலைத்திருநாள் கொண்டாடப் போகிறாராம்? எங்கே லண்டனில். ஒரு வீர மறவன் மணம் கொள்ளப்போகும் ஒருத்தியை அவள் வயதுக்கு வருமுன்பேதான் மனத்தால் மணந்துகொண்டேன். அவள் வயிற்றில் பிறக்கப் போகும் பிள்ளைக்கு இன்றே "பிறந்த நாள்விழா" என்று கொண்டாடும் பைத்தியத்தின் செயலைச் செய்யும் இந்த அரைவேக்காட்டு அலிகட்கும் ஈழ மக்கட்கும் என்ன தொடர்பு?

விளையாட்டுப்பிள்ளைத் துப்பாக்கி, போர்த்துப்பாக்கி ஆகாது. மூட்டை கல்லை உடைககாது. மற்றொருவன மூக்கினால் ஒருவன் மூச்சுவிட முடியாது. இதை மக்களையும் இயககத்தையும் அணுகாதவர்களும் காணாதவர்களும் தங்களைத் தாஙகளே ஏமாற்றிக் கொள்ள வேண்டா.

"மக்கள் திரளினரைச் சரியாகத் தெரிந்துகொண்டு, மக்களுக்குச் சேவை புரியவேண்டும். மக்களது நலன்களை வெளிப்படுத்தவும் முன்னணிப் படையான அமைப்பு, தனது நடவடிக்கைகள் அனைத்தையும் மக்கள் திரளிடையே மேற்கொள்ளவேண்டும். விதிவிலக்கின்றி, மக்களிடையே உள்ள மிகச்சிறந்த மாந்தர்களை எடுத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும், மக்கள் திரளுடன் அது கொண்டுள்ள தொடர்பு பராமரிக்கப்படுகிறதா, அது ஓர் உயிருள்ள தொடர்பாக உள்ளதா என்பதை எச்சரிக்கையுடன் சரி பார்த்துக் கொள்ளவேண்டும். இவ் வழியில் மக்கள் திரளைப் பயிற்றுவித்து, அவர்களின் நலனை வெளிப்படுத்துகிறது. அவர்கள் நடவடிக்கைகள் அனைத்தையும் உணர்வு பெற்ற இன அடிப்படையில் அரசியல் பாதை வழியாக விடுதலைக்கு இட்டுச் செல்கிறது" என்ற இலெனின் மொழிவழி நிற்காது தான்தோன்றித் தனமாகச் செய்யும் எச்செயலும் ஈழ மக்கட்குச் செய்யும் கேடாகும்.

மலையகம் உள்ளிட்ட ஈழ மக்களின் விடுதலை கனிந்து வருகிறது. மக்கள் படை முன்னணிக்கு முட்டுக்கட்டை இட்டாலும் அப்படை வென்றே தீரும். ஈழம் விடுதலையடையும்; வெற்றி விழாவும் உண்டு; வெற்று விழாவன்று.

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

# பொங்கல் முழக்கமும் ஈழவரும்

ஜனவரி 14 "தமிழீழம் மலரப் போகின்றது" அறிவிப்புகள் ஆரவாரத்துடன் வெளியிடப்பட்டிருக்கின்றன, வானத்திலே முட்டையிட்டு குஞ்சு பொரித்துக் காட்டப் போகின்றோம் பாருங்கள் என்று வித்தை காட்டுகின்றார்கள். கனவுகள் காண்பது எளிதுதான். யாருக்கும் தடையில்லைத்தான், ஆனால், நனவுகளாக வேண்டுமே. அடிப்படைகள். தளங்கள் இன்றி எதைத்தான் சாதிக்க முடியும்.

ஈழத்தின் போராட்டம் கூர்மையடைந்த வண்ணம் இருக்கின்றது. மக்கள் புரட்சிகர தலைமை—வழிகாட்டல் வேண்டி தவிக்கின்றார்கள் கடந்தகால தலைமைகள்—குழுக்கள் ஐயத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன இந்த நிலையில் இத் "தகிடுதத்தக்காரர்கள்" கிலுகிலுப்பை அடிக்கின்றார்கள்.

ஆனால், இவர்கள் குதிக்குமளவுக்கு ஈழவர் நடுவில் எந்தவித வரவேற்பையும்—ஆதரவையும் காணமுடியவில்லை. எந்தவித இயக்க பின்னணியுமற்ற "சுதந்திரன்" பத்திரிகை ஒன்றே இந்த அறிவிப்பையும் ஆரவாரத்தையும் தோரணம் கட்டி வரவேற்கின்றது. இதைவிட ஈழத்தில் இயங்கிக் கொண்டிருக்கும்-எந்த இயக்கமோ-குழுவோ இவ் அறிவிப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் செய்திகளில்லை.

இந் நிலையில் இவர்கள் யார்? ஈழத்திற்கும் இவர்களிற்கும் இடையான தொடர்பு என்ன? என்பது பற்றி நாம் உரத்துக் கேள்வி எழுப்ப வேண்டியவர்களாயுள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய நாடுகள் சபையில் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். அமீது சொற்பொழிவாற்ற இருந்த சமயத்தில் "தமிழீழ நாட்டின் பிரதிநிதி" என தம்மை அறிவித்துக் கொண்டு ஒருவர் சொற்பொழிவாற்ற முற்பட்டார். இந்த மனிதரை கிருஷ்ண வைகுந்தவாசன் என்று ஏடுகள் அறிவித்தன. மகத்தான "சாதனை" என்று அனைவரும் வரவேற்றனர். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு சாம்பியா நாட்டில் நீதிபதியாக கடமையேற்க ஈழத்தைவிட்டு வெளியேறிய வரும், தம்மைக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இணைத்துக் கொண்டிருந்தவருமான திரு. கிருஷ்ண வைகுந்தவாசனின் இந்தச் சாதனையை, தமிழ்பேசும் மக்களின் ஜனநாயகத் தலைமையான தமிழர்விடுதலைக் கூட்டணியும் அங்கீகரித்தது. இதனால் 80ஆம் ஆண்டில் இலண்டன் மாநகர் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் ஏறத்தாழ பத்துத்தபால்தலை இயக்கங்களை ஒருங்கிணைத்து பதினோராவது இயக்கமாக 'தமிழர்ஒருங்கிணைப்புக்குழுவை' ஏற்படுத்தி அதன் தலைவரென்ற மகுடத்தை. வைகுந்தவாசனுக்கு ஏற்றி வைத்தார். அந்த மகுடத்தை ஏந்திக்கொண்டு போஸ்ரன் (Boston) நியூயோர்க் (New york) போன்ற பட்டணங்களுக்கும் வேறு சில நாடுகளுக்கும் பறந்து திரிந்தார். இந்த நிலையிலேயே கடந்த ஆண்டில் "82 தைப்பொங்கலன்று தமிழீழம்" என முழக்க மிட்டார், பின் தமது முழக்கத்தை ஏற்கும்படி சில நாட்டுத் தலைவர்களுக்கு வேண்டுகோளும் விடுத்தார். தான் தோன்றித் தனமாக—தன்னிச்சையாக ஒரு பெரும் மக்கள் கூட்டத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் முனைந்துள்ளார். ஒரு போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை வரலாற்று இயங்கியலைப் புரிந்து கொள்ளாமல்-அடித்துக் கனிய வைக்கலாமென முயல்கின்றனர். இவர்கள் "வரலாற்றுக் குருடர்கள்".

ஈழக் கோரிக்கையானது-நடுத்தர மக்களின் அபிலாசைக் கோரிக்கையாக-கூக்குரலாக மட்டுமே கடந்த காலத்தில் காணப்பட்ட போதும் எழுபதுக்களின் பாதியில் இருந்து இளைய தலைமுறையினரின் அறிவுவாணர் எழுச்சியானது அடிப்படை மக்களை இணைத்ததன் பின்பே புதியமுனைப்புடன் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. அப்போராட்டம் மெல்ல மெல்ல முன்னெடுத்துச் செல்லப்படுவதை உணர்ந்த-நடுத்தர, குட்டி முதலாளிகள் தம்வர்க்க நலன்கள் பாதிக்கப்பட்டுப் போவதைக் தெரிந்து போராட்டத்தைப்பின்னடையச் செய்ய முயலுகின்றனர்.

இதே வேளையில் தமிழ்பேசும் மக்களின் சனநாயகத் தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணி கூட இப்பிரகடனத்தை வன்மையாகக் கண்டித்துள்ளது. இப்பிரகடன அறிவிப்பைத் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் "நகைச்சுவையானது" என வருணித்துள்ளார். இந்நிலையில் இவர்களின் பொங்கல் முழக்கமானது "அரசியல் முதிர்ச்சியற்ற" சிறுபிள்ளைத் தனத்தையே வெளிப்படுத்துகிறது.

ஆனால், ஈழமக்களின் போராட்டத்தில் அக்கறையுள்ள நமக்கு இவ் அறிவிப்பு ஆர்வத்தையும்-பரபரப்பையும் ஏற்படுத்தக் கூடியது தான். ஆனால் நமது எதிர்பார்ப்பு, ஏமாற்றமளிக்கும் என்பதே 'பொதுமை'யின் கருத்து. ஈழத்தில் சிக்கலை ஆழமாக நோக்கினால் தான் நம் எதிர்பார்ப்பு எத்தளவுக்கு சரியானது எனப் புரிந்து கொள்ள முடியும். ஜனநாயக தலைமையும்-இயக்கமும்-சரணடைவதில்-சிக்கலைப் பூசிமெழுகுவதில் தீவிரம் காட்டுகின்றனர். இது அவர்களின் வர்க்க நலனை வெளிப்படுத்துகிறது. இதனைவிட "விடுதலை" கோரும் மற்றைய குழுக்களோ மக்களில் இருந்து வெகுதூரத்தில் நிற்கின்றனர். புரட்சிகரமான தலைமையும் இயக்கமும் இப்போது உருவெடுத்து வருகிறது. கருத்து மக்களைப் பற்றிப் பிடித்து வருகிறது. இனி அது சக்தியாக உருவெடுக்க வேண்டும். அணிதிரட்டப்பட வேண்டும். இந் நிலைமையில் "82" தைப்பொங்கலன்று தமிழீழப் பிரகடனம்" ஒரு வெற்று வேட்டு அறிவிப்பே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்